செ.வெ.எண்: 81 / ஜூலை / 2021 நாள்:23.07.2021

# செய்தி வெளியீடு

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மறவனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய தடுப்பூசித் திட்டத்தின் கீழ் நியுமோகோக்கல் கான்ஜூகேட் என்கிற நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் ஆகிய நோயிலிருந்து குழந்தைகளை பாதுகாப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் பங்கேற்று தடுப்பூசி வழங்குவதற்கான முகாமினை இன்று (23.07.2021) தொடங்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து 10 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் வழங்கினர்.

நியுமோகோக்கல் நிமோனியா என்பது பாக்டீரியாவால் ஏற்படும் ஒருவித தொற்று நோய் ஆகும். இது குழந்தைகளை பெரும்பாலும் பாதிக்கின்றன. இதனால் குழந்தைகளுக்கு சுவாசிப்பதில் சிரமம், காய்ச்சல், இருமல், மற்றும் மூச்சுத்திணறல் ஆகிய குறைபாடுகள் ஏற்படுகின்றன. இது கடுமையாக இருந்தால், குழந்தைகளின் மரணத்திற்கு கூட வழிவகுக்கும். நியுமோகோக்கல் நோய் ஒருவருக்கு ஒருவர் இடையிலான சுவாசத் துளிகளால் பரவுகிறது. (எ.கா. இருமல் மற்றும் தும்மல்).

குழந்தைகளுக்கு இந்த வகை நிமோனியா நோய்களுக்கு எதிராக நல்ல பாதுகாப்பை வழங்கும் புதிய நியுமோகோக்கல் காஞ்சுகட் தடுப்பூசி தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசி தற்போது அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் வழங்கப்பட உள்ளது.

தவணைகள்: பி.சி.வி 6 வாரங்கள், 14 வாரங்கள் மற்றும் மீண்டும் 9ஆம் மாதத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. நியுமோகோக்கல் நோயிலிருந்து குழந்தைகளை பாதுகாக்க இந்தபி.சி.வி தடுப்பூசியின் மூன்று தவணைகளையும் அரசு இலவசமாக வழங்கி வரும் தடுப்பூசி பட்டியலில் சேரும். இந்த தடுப்பூசி குழந்தையின் வலது தொடையில் நடுப்பகுதியில் ஒரு உள் தசையில் ஊசி மூலம் தடுப்பூசி வழங்கப்படும்.

இந்நிகழ்வில், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பழனியாண்டி, முசிறி சட்டமன்ற உறுப்பினர் திரு.ந.தியாகராஜன், ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.சிந்துஜா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) திரு.ராம்கணேஷ், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி அமிர்தவல்லி ராமசாமி, முன்னாள் துணை மேயர் திரு.அன்பழகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**